



சிவமயம்

# திருப்பொன்னூஞ்சல் - 5

மட்/ களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார்
மட்/ களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசத்தி ஸ்ரீமுருகன்
மட்/ குருமண்வெளி ஸ்ரீ மகா விஷ்ணு மூர்த்தி
மட்/ கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர்
மட்/ களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார்

## 2007



ஆக்கம்
**திரு.ஆறுமுகம் - அரசரெத்தினம்.**

வெளியீடு:
திருவருள் நூல் வெளியீட்டுக் குழு,
களுதாவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

| | | |
|---|---|---|
| 1. | நூற்பெயர் | திருப்பொன்னூஞ்சல் |
| 2. | நூலாசிரியர் | திரு.ஆறுமுகம்.அரசரெத்தினம் |
| 3. | முகவரி | வாகரையார் வீதி,களுதாவளை-01, களுவாஞ்சிகுடி. |
| 4. | வெளியீடு | திருவருள் நூல் வெளயீட்டுக் குழு, களுதாவளை. |
| 5. | தொலைபேசி | 065-2250306 |
| 6. | அச்சுரிமை | திருவருள் நூல் வெளியீட்டுக் குழு, (2ம் பதிப்பு யூன்-2007) |
| 7. | அச்சகம் | நியூ கீன் |
| 8. | முகவரி | இல.72,முனை வீதி,மட்டக்களப்பு. |
| 9. | தொலைபேசி | 065-2222204 |
| 10. | அளவு,பக்கம் | 1/8,V+15 |
| 11. | பிரதிகள் | 1000 |
| 12. | வகை | சிற்றிலக்கியம் |
| 13. | மொழி | தமிழ் |


---

அன்புடன் அழைக்கின்றோம்.

சிவபதமடைந்தவர்களின் நினைவாக வழங்கப்பட்ட நிதியுதவி இந்நூல் அச்சில் வெளிவருவதற்கு அனுசரணையாயிற்று.நினைவு கூரப்படுபவர்களின் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம். நூல் வெளியிடும் முயற்சியில் தொடர்ந்தும் செயற்படவுள்ளோம். இதற்காக களுவாஞ்சிகுடி மக்கள் வங்கியில் 2-085147-5ஆம் இலக்க சேமிப்பு கணக்கு ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.இந்த நூல் வெளியீட்டுடன் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து விபரங்களை அறிந்து இம் முயற்சியில் எம்மோடு இணைந்து கொள்ள வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

களுதாவளை. திருவருள் நூல் வெளயீட்டுக் குழு,
களுவாஞ்சிகுடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மட்/ களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய
முன்னாள் பிரதம குருவும் கொழும்பு கொம்பனி வீதி
அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலின் பிரதமகுருவுமான
**சிவஸ்ரீ சோ- சந்திரசேகரக் குருக்கள் ஐயா அவர்கள்**
வழங்கிய

## ஆசியுரை

*திருவருட் திருக்கோவில்கள் பல விளங்கும் இலங்கைத் தீவு பெருங்காப்பியங்களான கந்தபுராணம், இராமாயணம் விதந்து கூறும் பெரும்புகழ் படைத்த சிறிய தேசம். இத்தீவின் கிழக்கு நகரில் பிரசித்தியும் பேரருளுமுள்ள பெருங் கோவில்கள் பலவுண்டு. அதில் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார், திருநீற்றுக்கேணி திருமுருகன், தான்தோன்றீஸ்வரன் கோவில்கள் அடியார்க்கருள் புரியும் வரலாறு அமைந்தவையாகும். குழந்தைகள் ஊஞ்சல் கட்டி ஆடுவார்கள். அவர்கட்கு அந்தநேரம் வேறு சிந்தனை எதுவும் கிடையாது. நன்றாக ஆடவேண்டுமென்கிறவெண்ணம் ஒன்றுதான் நினைவில் வரும். மனிதப்பிறவியின் துன்பங்கள் நீங்க முடியாதவை: செம்பினிற் களிம்பு போலத் தொடரும். எங்கள் ஆன்மா உடம்பினிற்றுன்பமும் பிறவியும் பாசமும் மறந்து உன்பதவிநான்கில் சாலோக பதவியாவது அடைவதற்கு திருவுளமிரங்கியருள்வீர்.*

*பூலோகத்துன்பவூஞ்சலாடும் ஆன்மாக்களை துட்டநிக்கிரக சிட்டபரிபாலிப்பால் சாலோகவூஞ்சலாடத் திருவருள்புரிவீராக. இதற்கு தேவரீரைத் திருவூஞ்சலாட்டுவதேயொழிந்து எங்களால் வேறெதுவும் செய்ய முடியாது என்று வேண்டுவதேயாம். திருவிழா நிகழ்வது துட்டநிக்கிரக சிட்டபரிபாலனம் ஆகும். தீர்த்தோற்சவத்தின் பின் திருவூஞ்சல் ஆட்டுவது இறையருள் பெற்று சிவலோகத்தில் ஆன்மாக்கள் பிறவித் துன்பமற்று இருப்பதைக் குறிக்கும். மாணிக்கவாசகர் பெருமான் பாடியது போல் ஆங்காங்கு தோன்றியுள்ள ஆலயங்களின் மகிமைகளை வைத்து திருவூஞ்சல் பாடவேண்டும். இந்த வகையில் களுதாவளைப் பிள்ளையார், திருநீற்றுக்கேணி திருமுருகன், தான்தோன்றீஸ்வரர், மகாவிஷ்ணு மூர்த்தி ஆலயங்கட்கு திரு. ஆ. அரசரெத்தினம் அவர்கள் பல அன்பர்களின் ஆதரவுடன் இப்பாடல்களை யாத்துத்தந்துள்ளனர். இதுபோல் மேலும் சமயவிரிவான நூல்வரலாறுகளையும் மற்றய ஆலயங்கட்கும் உள்ள திருவருள் வரலாறுகளையும் வெளியிட்டு சமயப்பணி மேலோங்க வேண்டுமென்று திருவருள்புரிந்தருள்வீராகவென களுதாவளைப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கிறேன்.*

இவ்வண்ணம்

27-04-2002 **சிவஸ்ரீ. சோ. சந்திரசேகரக் குரு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மட்/ களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய பிரதம குரு

**சிவஸ்ரீ.மு.கு.சச்சிதானந்தக் குருக்கள்** ஐயா அவர்களும்.

மட்/ களுதாவளை திருநீற்றுக் கேணி சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலய

பிரதம குரு **சிவஸ்ரீ. வே. கு. சபாநாயகக் குருக்கள்** ஐயா

அவர்களும் இணைந்து வழங்கிய

## ஆசியுரை

மனித வாழ்க்கையில் ஊஞ்சலாட்டம் மகிழ்ச்சிப் பெருக்கை மேம்படுத்த செயற்படுத்தப் படுகின்றது. ஊஞ்சல் ஆடுவதும், ஊஞ்சல் ஆட்டுவதும் மகிழ்ச்சி ஊட்டுவனவாகும். இவ்வகையில் மணிவாசகப் பெருமானால் சிவபெருமானையும் எம்பெருமாட்டியையும் நோக்கிப் பாடப்பட்ட திருப்பொன்னூஞ்சற் பாடல் தத்துவம் பொதிந்தது. அன்பிற்குரிய திருவாளர் ஆறுமுகம் அரசரெத்தினம் ஆசிரியர் அவர்கள் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையாரையும், திருநீற்றுக் கேணி சிவசக்தி ஸ்ரீ முருகப் பெருமானையும் நோக்கிப் பாடிய திருப்பொன்னூஞ்சற் பாடல்கள் இடம், பொருள், ஏவல் என்ற செயல் கருத்துப்பாட்டிற்கமைவாக மூர்த்திகளின் அருமை பெருமைகளை வெளிப்படுத்துவதோடு தலச்சூழலையும் படம்பிடித்துக் காட்டுவனவாக அமைந்திருக்கின்றன.

இப்பொன்னூஞ்சல் பாடும் பஜனாவளி இசைமன்றக் குழுவினர் இசை அமைப்பதும் பாடுவதும் தனித்துவமான பாணியாகும். பொன்னூஞ்சல் பாடும் போது நாங்கள் நின்று கேட்டு உளம் நெகிழ்வதோடு, அடியார்களின் மெய்யுருகலையும் கண்ணூடாகக் கண்டிருக்கின்றோம். இப்பாடல்கள் ஏனைய தலப்பொன்னூஞ்சற் பாடல்களை விட தனித்துவமானவை. தனது கல்வித் தகைமையை வெளிக்காட்டாது பாமர மக்களுக்கும் விளங்குவதற்கு ஏற்ற எளிய நடையில் பாடல்களை இயற்றியுள்ளார். குருமண்வெளி ஸ்ரீ மகா விஷ்ணுப் பெருமானையும் சக்தியையும் ஒன்று சேர்த்து அவரின் அவதாரமும் அருட்பொலிவும் விளங்கப் பாடியுள்ளார். கொக்கட்டிச் சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரரை நோக்கிய பொன்னூஞ்சற் பாடலில் அத்தலத்தின் பாரம்பரியத்தையும் மூர்த்தியின் கீர்த்தியையும் எம்முன் நிறுத்திக் காட்டியுள்ளார். இப்பாடல்களை நூல்வடிவில் வெளியிடுவதையிட்டு வரவேற்று மகிழ்ச்சியடைகின்றோம். இந்நூலாசிரியருக்கும் இதனோடு சம்பந்தப்பட்டோருக்கும் எல்லாம் வல்ல களுதாவளைச் சுயம்பு லிங்கப்பிள்ளையாரும், திருநீற்றுக்கேணி முருகப்பெருமானும், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரரும் குருமண்வெளி மகாவிஷ்ணு மூர்த்தியும் நீடித்த ஆயுளாரோக்கியமும் இதே போன்ற நூல்களை மென்மேலும் வெளியிடும் பாக்கியமும் வேண்டி ஆசீர்வதிக்கின்றோம்.

இவ்வண்ணம்

களுதாவளை
27-04-2002

**சிவஸ்ரீ. மு.கு. சச்சிதானந்தக் குரு**
**சிவஸ்ரீ. வே.கு. சபாநாயகக் குரு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதிதுணை

**மட்டக்களப்பு களுதாவளை**
**சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய**
**நிருவாக சபைத் தலைவரின்**

## அணிந்துரை

இன்றைய கம்பியூட்டர் யுகத்தில் நம்முடைய ஆத்ம சுகத்திற்காக, சில நிமிடங்களை ஒதுக்கிவைத்து இத்தகைய நூல்களின் கருத்துக்களை மனதில் நிறுத்தி இல்லறத்தை நல்லறமாக்கி நமக்குமட்டுமன்றி பிறருக்கும் பயன்படும் வண்ணம் செயற்பட்டு இறைவனின் அருளைப் பெறமுயற்சிப்பது நம்கடன். அப்போதுதான் இவ்வாறான நூலின் பயன் அருளுடைமையாக்கப்பட்டு அகத்திற்கும் இல்லறத்துக்கும் இன்பமூட்டும்.

எமது தலங்களின் மகிமைபற்றிய அரிய தகவல்கள் இந் நூலில் இடம்பெறுகின்றன. இவற்றின் உட்பொருளை அறிந்து சமயநெறியைப் பேணுவதற்கு ஏற்ற வழிகாட்டியாக இந்நூல் அமைகிறது.

நெஞ்சுருக்கும் இவ்வாறான பாக்களை இயற்றி எல்லோரும் அறியும் வண்ணம் வெளிப்படுத்தும் நூல்வெளியீட்டுக் குழுவின் முயற்சி மேலும் விரிவடையவேண்டும் என வாழ்த்துகிறேன்.

**கா. வேலாயுதபிள்ளை**
தலைவர்
27-04-2002 பிள்ளையார் ஆலயம் களுதாவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## மட்/ களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசத்தி ஸ்ரீ முருகன் ஆலயபரிபாலன சபையினர் வழங்கிய

## அணிந்துரை

அடியார்களைப் பத்திப்பரவசத்தில் ஆழ்த்தும் திருப்பொன்னூஞ்சல் பாடல்கள் தீர்த்த உற்சவ காலத்தில் மட்டும் பெரும்பாலும் கேட்கக் கூடிய அரிய வாய்ப்புக்கள் இருந்து வந்தன. இந்த அரிய சந்தர்ப்பம் எல்லோர்க்கும் கிடைப்பதில்லை. இத்திருப்பொன்னூஞ்சற் பாடல்களைப் புத்தகமாக வெளியிடுவதனால், அநேகமாக காதினால் மட்டும் கேட்டு இன்புற்றிருந்த பத்த கோடிகள் தாங்களாகவே படித்து உள்ளம் மகிழ்ந்து, இறைசிந்தனையை மேம்படுத்த மிகவும் உதவியாக இருக்கிறது. களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார், களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசத்தி ஸ்ரீ முருகப் பெருமான், குருமண்வெளி மகா விஷ்ணு மூர்த்தி, கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆகிய ஆலயங்களின் திருப்பொன்னூஞ்சல் பாடல்கள் ஒரு நூலில் வெளியிடுவது மிகவும் சிறப்பானது. இத்திருப்பொன்னூஞ்சல் பாடல்களைப் பாடலாசிரியர் திரு. ஆ. அரசரெத்தினம் அவர்கள் தலச்சிறப்பினூடாக எல்லோருக்கும் விளங்கும் வகையில் எளியதமிழில் பாடியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. ஆதலால் இந்த இறைபணியினை மேற்கொண்ட பாடலாசிரியருக்கும் பஜனாவளி இசைமன்றக் குழுவினருக்கும் களுதாவளை திருநீற்றுக் கேணி சிவசத்தி ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபையினர் நன்றியையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

இவ்வண்ணம் அன்புடன்

**ஞா. யோகநாதன்** (தலைவர்)
**க. நாராயணபிள்ளை** (செயலாளர்)
**செ. சிதம்பரநாதன்** (பொருளாளர்)

27-04--2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வெளியீட்டுரை

திருவருட் செல்வராகிய மாணிக்கவாசகர் தெய்வத் தமிழ் மணம் கமழ செந்தமிழ்ச் சொற்களைத் தெரிந்தெடுத்து பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பாடல்கள் உலகப் பிரசித்தமானவை. உருகாத உள்ளங்களையும் உருகவைக்கும் திருவாசகப் பாடல்களுக்கு ஈடும் இணையும் கிடையாது. இந்தியாவில் உள்ள திருவுத்தர கோசமங்கை என்னும் சைவத் திருத்தலத்தில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் சிவபெருமானையும் உமாதேவியையும் போற்றிப் புகழ்ந்து பாடிப் பணிந்து இளம் பெண்கள் ஊஞ்சல் ஆடுவதாக ஒன்பது திருப்பொன்னூஞ்சற் பாடல்களை மாணிக்கவாசகர் பாடி அருளினார். சைவக் கோவில்களில் திருவிழாக்கள் நடைபெறும் காலங்களில் சுவாமிகளை திருப்பொன்னூஞ்சல் ஆட்டும் போது இப் பாடல்களையே பாடினர். சிவபெருமானுக்குப் பாடப்பட்ட இந்தப் பாடல்களையே விநாயகர், முருகன், சத்தி கோவில்களிலும் பாடலாயினர். வானுயர்ந்த மாடமாளிகைகள் இருந்த போதும் மண் குடிசை கட்டி விளையாடுவதிலேயே மழலைச் செல்வங்கள் மன மகிழ்ச்சி அடைவது இயல்பாகும். பரிபக்குவ நிலையடையாத மனிதர்களும் குழந்தைகள் மணல் வீடு கட்டுவது போன்று பொன்னூஞ்சற் பாடல்களைப் பாடலாயினர். திருத்தலச்சிறப்புக் கூறும் பாடல் வரிசையில் அமைந்தவைகளே இப்பொன்னூஞ்சற் பாடல்களாகும். அடியவர்கள் இலகுவாக விளங்கிக் கொள்ளும் வகையில் எளிமையான சொற்களால் இயற்றப்பட்டுள்ள இப்பாடல்களையும் இறைவன் திருவடியில் காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

**திருவருள் நூல் வெளியீட்டுக் குழு**

களுதாவளை,
களுவாஞ்சிகுடி.
27.04.2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம்

சிவமயம்

# மட்/ களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார்
# திருப் பொன்னூஞ்சல்

திருச்சிற்றம்பலம்

01. ஓங்காரத்துருவமென உமையவளின் பாலகனாய்
தீங்ககற்றும் நாயகனாய் தீவினைகள் பலதீர்த்து
செங்கரும்பும் தேன்கதலி பாற்குடமும் பலாச்சுளையும்
மாங்கனியும் மாதுளையும் மற்றுளவும் தாமருந்தி
ஈங்கு வரும் அடியவரின் இன்னல்களைத் தாமகற்றி
பாங்குடனே பவவினைகள் பற்றறவே மாற்றுவிக்கும்
களுவைநகர்க்கற்பகமே கணபதியே கஜமுகனே- எங்கள்
களுதாவளைப்பிள்ளையாரே பொன்னூஞ்சல் ஆடாமோ.

02. சுயம்புவென எழுந்தருளி சுடர்பரப்பும் அருளொளியாய்
மயங்குகின்ற செயல்களிலே மயக்கறுக்கும் மருந்தெனவே
பயம்நிறைந்த வேளையிலே பக்கத்துணையாயிருப்பாய்
கயம்தலையான் அசுரனது கருவறுத்துக் காத்தருளி
அயன்திருமால் அனைவருமே அடிபணிந்து போற்றி செய்ய
வியப்புடனே உமையவளும் விரதமதுதான் நோற்கும்
களுவைநகர்க் கற்பகமே கணபதியே கஜமுகனே- எங்கள்
களுதாவளைப்பிள்ளையாரே பொன்னூஞ்சல் ஆடாமோ

03. பேசாதபிள்ளைகளைப் பேசப்பழக்குவிப்பீர்
தீராதநோய்பிணிகள் தீர்த்து அருள்புரிவீர்
வாராத செல்வமெல்லாம் வருவித்துத்தந்திடுவீர்
ஊரெல்லாம்கூட்டுவித்து உன்பதியில்பொங்கல் செய்வீர்
பாரிலுள்ள பாவலர்கள் பாடிப் பயன்பெறவே
பாரதத்தைப் பருவதத்தில் பக்குவமாய் எழுதிவைத்த
களுவைநகர்க்கற்பகமே கணபதியே கஜமுகனே- எங்கள்
களுதாவளைப்பிள்ளையாரே பொன்னூஞ்சல் ஆடாமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. நடவாத பிள்ளைகளை நடக்கப்பழக்குவிப்பீர்
முடம் ஊமை செவிடுகளை முற்றுந் திருத்துவிப்பீர்
திடமான தேர்தனக்கும் அச்சதனைமுறித்து வைத்தீர்
குடமுருட்டிக் காவேரியைக் குவலயத்தில் ஓடவிட்டீர்
அடம்பிடித்த இராவணனின் அகந்தை அடக்குவித்தீர்
இடம்பலவும் விட்டுவிட்டு இனிதாக இங்கமர்ந்த
களுவைநகர்க்கற்பகமே கணபதியே கஜமுகனே- எங்கள்
களுதாவளைப்பிள்ளையாரே பொன்னூஞ்சல் ஆடாமோ

05. அன்னைபிதா உலகமென்ற உண்மை உணரவைத்தீர்
அறுகம்புல் மகிமைதனை அகிலம் அறியவைத்தீர்
ஔவைதனைக் கைலாசம் அன்புடனே தூக்கிவிட்டீர்
நம்பியவர் பூசையேற்று நற்கலைகள் ஊட்டி வைத்தீர்
ஏடிருக்கும் இடம்காட்டி திருமுறைகள் காத்து நின்றீர்
காடுதனில் வேலவனும் கைப்பிடிக்க உதவி செய்த
களுவைநகர்க்கற்பகமே கணபதியே கஜமுகனே- எங்கள்
களுதாவளைப்பிள்ளையாரே பொன்னூஞ்சல் ஆடாமோ

06. சித்தியென்றும் புத்தியென்றும் சத்தியிருபேர்கள் உள்ளார்
முத்தன்ன வெண்ணகையாள் வல்லபையும் சத்தியொன்று
மத்தளத்தை ஒத்திருக்கும் மாபெரியவயிறுமுண்டு
முத்திருக்கும் கொம்புமுண்டு முப்புரியாம் நூலுமுண்டு
பத்தருக்கு அருள்புரிய பாரியதோர் கையுமுண்டு
சித்தருக்கு அருள்புரிய செந்நுதலில் விழியுமுள்ள
களுவைநகர்க் கற்பகமே கணபதியே கஜமுகனே- எங்கள்
களுதாவளைப்பிள்ளையாரே பொன்னூஞ்சல் ஆடாமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. காலனையே தானுதைத்து காமனையும் தானெரித்து
வேலனையும் தோற்றுவித்துவேதனைகள் தீர்த்துவைத்து
சூலமொன்று கையேந்தி சுடலையிலே ஆடுகின்றோன்
மாதவள்க்குப் பொன்தோற்க மாயவனும் பொய்யுரைக்க
ஆலமரநீழலிலே ஆடுகின்ற பாம்புருவாய்
சாலவுமேதான் கிடந்த சாபமது மாற்றுவித்த
களுவைநகர்க்கற்பகமே கணபதியே கஜமுகனே- எங்கள்
களுதாவளைப்பிள்ளையாரே பொன்னூஞ்சல் ஆடாமோ

08. மருதநிலவயலருகே மட்டுநகர் வாவியுண்டு
மருதமரநிழலுமுண்டு மலர்க்குளமும் அருகிலுண்டு
சுருதிகளும் கண்டறியா சோதி மலரடிகள்
கருதிவரும் அடியவர்க்கு கணநாதன் காட்சியுண்டு
தருநிறைந்த நிழலமர்ந்த தாழ்துளைக்கை தனையுடைய
வருவினைகள் நீக்குகின்ற வாரணத்தின் மாமுகத்தோய்
களுவைநகர்க்கற்பகமே கணபதியே கஜமுகனே- எங்கள்
களுதாவளைப்பிள்ளையாரே பொன்னூஞ்சல் ஆடாமோ

09. ஏழரையாம் சனியனையே ஏமாற்றி வழியனுப்பி
தோழமையாய்க் கொண்டவர்க்குதுணைபலவும் செய்தருளி
ஆழம்மிக்க கடல்தனிலும் ஆறுகுளம் நீர்நிலையும்
தீர்த்தமது தானாடி திரும்பி வந்து இனிதமர்ந்து
சூழநிற்கும் அடியவர்கள் தோத்திரங்கள் தாமிசைக்க
வேழமுகம் கொண்டெமது வினைபலவும் வேரறுக்கும்
களுவைநகர்க்கற்பகமே கணபதியே கஜமுகனே- எங்கள்
களுதாவளைப்பிள்ளையாரே பொன்னூஞ்சல் ஆடாமோ

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



ஓம் சிவமயம்

மட்/ களுதாவளை திருநீற்றுக்கேணி

**சிவசத்தி ஸ்ரீ முருகன்**

# திருப்பொன்னூஞ்சல்

திருச்சிற்றம்பலம்

01. சரவணனேசண்முகனே சத்திவடிவேல் முருகா
அரவணியும் ஆண்டவனின் திருநுதலில் வந்தவனே
மரமாகி நின்றவனே மங்கை வள்ளி மணவாளா
கரமீராறுடையவனே கண்ணுதலின் திருமகனே
வரம்மிகுந்த சூரனது உரம்பிளந்த வடிவேலா
சிரம்குட்டிப் பிரமனையே சிறைவைத்த சீராளா
சிவசத்தி வேல்முருகா சிந்தையுறை மால்மருகா- எங்கள்
திருவெண்கேணிவேல் முருகா பொன்னூஞ்சல் ஆடாமோ

02 செந்தில் வாழ் நாயகனே தேவர்களின் காவலனே
கந்தா கதிர்வேலா கதிரைமலை வாழ் முருகா
சிந்தாமணியே எம்தித்திக்கும் தேன்குடமே
வந்தெம்மை ஆள்வாய் வாரணத்தின் சோதரனே
மந்தாரமாலைபுனை மாமஞ்ஞை வாகனனே
தந்தானத்தானதன என்றாடும் வேல் அழகா
சிவசத்தி வேல்முருகா சிந்தையுறை மால்மருகா- எங்கள்
திருவெண்கேணி வேல்முருகா பொன்னூஞ்சல் ஆடாமோ

03. காடுதனில் குறவள்ளி காணமரம் ஆனவனே
பாடுகின்ற அடியவரின் பவவினைகள் தீர்ப்பவனே
ஓடுகின்ற மனமதனை ஒரு நிலையில் வைப்பவனே
தேடுகின்ற வேளைதனில் ஓடிவரும் உத்தமனே
ஆடுமயில் மீதமர்ந்து ஆறுதலைத் தருபவனே
ஆடுதனை வாகனமாய் அடக்கிவைத்தவேல் முருகா
சிவசத்தி வேல்முருகா சிந்தையுறை மால்மருகா- எங்கள்
திருவெண்கேணி வேல்முருகா பொன்னூஞ்சல் ஆடாமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. அருணகிரி சொல்லமுதை அன்புடனே ஏற்று அதை
திருப்புகழாய் திகழவைத்து தீஞ்சுவையை ஊட்டிவைத்தாய்
இருவருமே அறியவொண்ணா ஏகனருள் பாலகனே
குருபரனே உமையவளின் குழந்தை வடிவேல் முருகா
பருவரைகள் பொடிபடவே பல அசுரர் சிரமறவே
பொருபடவே வேலதனைப் போக்கி உயிர் மாய்த்தவனே
சிவசத்தி வேல்முருகா சிந்தையுறை மால்மருகா- எங்கள்
திருவெண்கேணிவேல்முருகா பொன்னூஞ்சல் ஆடாமோ

05. காவடிகள் ஆடிவரும் காட்சியிலே மகிழ்பவனே
சேவடிகள் தந்தெம்மைச்சேர்த்து வைக்கும் செவ்வேனே
தேவர்களின் துயர்களைந்து தெய்வானைதனை மணந்து
சேவலது கொடியுடனே சிவசத்தி வேலுடனே
பாவவினை மாற்றுதற்கும் பழவினைகள் போக்குதற்கும்
ஆவலுறும் அடியவரின் அன்பதனில் உறைபவனே
சிவசத்தி வேல்முருகா சிந்தையுறை மால்மருகா - எங்கள்
திருவெண்கேணிவேல் முருகா பொன்னூஞ்சல் ஆடாமோ

06. தமிழ் வளர்த்த வேல்முருகா தணிகைமலைமால் மருகா
சிமிழ்தனிலே எறும்படைத்த தேவி உமை பாலகனே
அமிழ்தான தமிழ் மொழிக்கு ஆசையுற்று வந்தவனே
தமிழ்க் கிழவி ஔவைக்கு சுட்டபழம் தந்தவனே
குமிழ்முலையாள் வள்ளிதனைகுஞ்சரனைக் காட்டியல்லோ
மகிழ்வுடனே மணம்புரிந்த வடிவேலா திருமுருகா
சிவசத்தி வேல்முருகா சிந்தையுறைமால்மருகா - எங்கள்
திருவெண்கேணி வேல்முருகா பொன்னூஞ்சல் ஆடாமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. மன்னியமாமறையோர்கள் மகிழ்ந்தேத்த மருவியெங்கும்
இன்னிசையால் தொண்டர்களும் இசைபாடி தொழுது நிற்க
கன்னியர்கள் இருவருடன் கானமயில் மீதேறி
உன்னி உனை நினைந்தவரின் உளமகிழ வரமருளி
துன்பமது தானகற்றி துயர்தீர்க்கும் தூயவனே
கன்மவினை அறுத்துஎமைக் காத்தருளும் காருண்யனே
சிவசத்தி வேல்முருகா சிந்தையுறை மால்மருகா- எங்கள்
திருவெண்கேணிவேல்முருகா பொன்னூஞ்சல் ஆடாமோ

08. கருதிவரும் பத்தர்களின் குறைநீக்கும் குருபரனே
திருமுகமாம் அறுமுகத்தால் தீவினைகள் தீர்ப்பவனே
திருநீற்றுக்கேணியிலே திகழுமிந்தக் கோவிலுக்கு
வருகின்ற அடியவர்க்கு வரமருளும் வடிவேலா
பெருமைபெறு பிரணவத்தைப் பிஞ்ஞகர்க்கும் சொன்னவனே
உருவமது இல்லாத ஒளிப்பிளம்பின் மறுவடிவே
சிவசத்திவேல்முருகா சிந்தையுறைமால் மருகா - எங்கள்
திருவெண்கேணிவேல் முருகா பொன்னூஞ்சல் ஆடாமோ

09. ஞானப்பழம் பெறுவதற்கு ஞாலம் வலம் வந்தவனே
மோனமதாய்ப் புன்முறுவல் காட்டிநிற்கும் வேல்முருகா
கானகத்தில் தேன்தினைமா கன்னியிடம் உண்டவனே
வானவர்தம் பகைவர்களை வடிவேலால் வென்றவனே
தேனமுதவள்ளி தெய்வ யானையுடன் நின்றவனே
போனகமாய் நஞ்சுண்ட புண்ணியர்தம் புத்திரனே
சிவசத்தி வேல்முருகா சிந்தையுறைமால் மருகா- எங்கள்
திருவெண்கேணி வேல்முருகா பொன்னூஞ்சல் ஆடாமோ

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் நாராயணாயநம



**மட் / குருமண்வெளி ஸ்ரீ மகா விஷ்ணுமூர்த்தி**

# திருப்பொன்னூஞ்சல்

திருச்சிற்றம்பலம்

01. பூபாரம் தீர்த்தவனே பூதகியைக் கொன்றவனே
மாபாரதம் முடித்த மாயவனே மாதவனே
வேதாவைத்தந்தவனே வேதனைகள் தீர்ப்பவனே
பூதானம் பெற்றவனே பூமகளின் நாயகனே
ஈவாரம் அற்ற அந்த இராட்சசியைக் கொன்றவனே
நாவாரத் துதிப்பவர்க்கு நற்கதியைக் கொடுப்பவனே- எங்கள்
குருமண்வெளி நகருறையும் கோபாலாகோவிந்தா
திருமகளாம் தேவியுடன் பொன்னூஞ்சல் ஆடாமோ

02.. சாரங்கம் வில் பிடித்தாய் சக்கரமும் கையெடுத்தாய்
சீரங்கம் தனில் உறைவாய் சீராமாகாடுறைந்தாய்
பாருள்ளே நீநிறைவாய் பசுமலையாய்க் காட்சி தந்தாய்
நீருள்ளே ஆமையென மீனாக நின்றிருந்தாய்
தேரோடும் மதுரைவிட்டு துவாரகைக்குச் சென்றவனே
ஏரோடும் குருமண்வெளி இனிதாக வந்தமர்ந்தாய்- எங்கள்
குருமண்வெளி நகருறையும் கோபாலா கோவிந்தா
திருமகளாம் தேவியுடன் பொன்னூஞ்சல் ஆடாமோ

03. மான்பிடிக்கச் சென்றவனே மாமனையும் கொன்றவனே
தேன் துளிக்கும் தண்துளப மாலைதனை அணிபவனே
கான்கிடந்த கல்லதனை அகலிகையாய் மாற்றி வைத்தாய்
வான்நிறைந்த தேவர்கட்கும் வள்ளலென அமுதளித்தாய்
ஆன்நிறைந்த இடைச்சேரி ஆயர்குலம் வாழ்ந்தவனே
கோன்நந்தகோபனது குழந்தையென வளர்ந்தவனே- எங்கள்
குருமண்வெளி நகருறையும் கோபாலா கோவிந்தா
திருமகளாம் தேவியுடன் பொன்னூஞ்சல் ஆடாமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. கன்றெறிந்து கனிபறித்தாய் காயாம்பூ நிறம் படைத்தாய்
குன்றெடுத்து மழைதடுத்தாய் கோபியர்கள் சேலைகொண்டாய்
மன்றுதனில் பாஞ்சாலி மானமது காத்து நின்றாய்
அன்றந்தப் போர்முனையில் அர்ச்சுனர்க்குக் கீதை சொன்னாய்
கன்று காலி மேய்த்து வந்தாய் காளிங்கநடனமிட்டாய்
சென்றந்தப் போர்முனையில் தேரூர்ந்தாய் திருமாலே-எங்கள்
குருமண்வெளி நகருறையும் கோபாலாகோவிந்தா
திருமகளாம் தேவியுடன் பொன்னூஞ்சல் ஆடாமோ

05. இரணியனைக் கொன்றொழித்தாய் இராவணனை வென்றழித்தாய்
அரவானைக் களப்பலியாய் ஆக்கிவைத்தாய் பெருமாளே
கரம்பிடித்த வில்லதனால் மரந்தொளைத்து திறங்காட்டி
வரமான வரம் படைத்த வாலியையும் உரம் கிழித்தாய்
பரம்பொருளாய் நிற்கும் எங்கள் பகவானே பரந்தாமா
வரந்தரவே வந்தமர்ந்தாய் வளமான எங்கள் நகர் - எங்கள்
குருமண்வெளி நகருறையும் கோபாலா கோவிந்தா
திருமகளாம் தேவியுடன் பொன்னூஞ்சல் ஆடாமோ

06. பாண்டவர்க்குத்தூது சென்றாய் பாஞ்சசன்யம் சங்கெடுத்தாய்
காண்டாவனமெரித்த காண்டீபர்க்குக்கணை தடுத்தாய்
மாண்டவர் போல் பாண்டவரை நஞ்சூட்டி மயங்கவைத்தாய்
வேண்டுமென்றே சூரியனை விரைவில் மறைத்துவைத்தாய்
ஆண்டவனே ஆதிமூலா அபய மென்று ஆனையது
வேண்டி நின்றவேளையிலே விரைந்து வந்து காத்தவனே- எங்கள்
குருமண்வெளிநகருறையும் கோபாலா கோவிந்தா
திருமகளாம் தேவியுடன் பொன்னூஞ்சல் ஆடாமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. மத்தன் மாமத்தனையும் மாய்த்து மறைத்தவனே
பித்தன் பிறைசூடும் பெருமானைக் காத்தவனே
கத்தும் கடல்தனிலே கால் நீட்டித் துயில்பவனே
சித்தம் களித்திடவே சீதை சிறை மீட்டவனே
பத்தும் அவதாரம் பாருலகில் எடுப்பவனே
வித்தை பலபுரியும் வித்தகனே விட்டுணுவே - எங்கள்
குருமண்வெளி நகருறையும் கோபாலா கோவிந்தா
திருமகளாம் தேவியுடன் பொன்னூஞ்சல் ஆடாமோ

08. உறிதிருடி வெண்ணெய்உண்டாய்உரல்தனிலே கட்டுண்டாய்
அறிதுயிலாய் பாற்கடலில் ஆலிலையில் பள்ளி கொண்டாய்
பொறிக்கிடங்கு வெட்டிவைத்த புல்லர்களைப் புறங்கண்டாய்
வறியவராம் குசேலருக்கு வாழ்வளிக்க நிதிகொடுத்தாய்
நெறியல்லா நெறிசெல்லும் நீசர்களை நீயழிப்பாய்
அறிவு வழிச்செல்வோரை ஆதரிக்க நீபிறப்பாய் - எங்கள்
குருமண்வெளிநகருறையும் கோபாலா கோவிந்தா
திருமகளாம் தேவியுடன் பொன்னூஞ்சல் ஆடாமோ

09. ஸ்ரீதேவி பூதேவி சேர்ந்திருக்கும் திருமார்பா
சீதை உருப்பிணியாள் பாமாவும் சத்திகளாம்
வேதாவும் மன்மதனும் வேதவல்லி அழகு வல்லி
நாதா உனக்கு நல்ல மகவாகப் பிறந்தனராம்
வேழமுகன் மருமகனாம் வேலவனும் மருமகனாம்
காளகண்டன் மைத்துனனாம் கௌரியவள் சோதரியாம்-எங்கள்
குருமண்வெளி நகருறையும் கோபாலா கோவிந்தா
திருமகளாம் தேவியுடன் பொன்னூஞ்சல் ஆடாமோ

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மட்/ கொக்கட்டிச் சோலை

## ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர்

# திருப் பொன்னூஞ்சல்

திருச்சிற்றம்பலம்

01. தேன்பொந்தில் குடியிருந்தீர் திகடனுக்குக் காட்சி தந்தீர்
மான் விழியாள் உலகநாச்சி மங்கைக்கும் அருள் கொடுத்தீர்
மான் மழுவும் கையேந்தி கௌரியுடன் தேரூர்வீர்
ஆன் கன்றாம் கல்எழுந்து அறுகம்புல் உண்ண வைத்தீர்
வான் உறையும் தேவர்களும் வந்துனது அடி பணிவார்
ஊன் உருகப் பணிகின்ற உத்தமர் தம் உள் உறைவீர்
தான் தோன்றியாக வந்து கோவில் கொண்ட கோமானே
கொக்கட்டி நகருறையும் ஈசுபராலிங்கேசா - எங்கள்
தான்தோன்றும் பெருமானே பொன்னூஞ்சல் ஆடாமோ

02. சித்திரத் தேர் ஆடிவர தேர்மீது நீர் இருப்பீர்
உத்தமியாம் பார்வதியும் உன்அருகில் உடனிருப்பாள்
புத்திரனாம் வேல் முருகன் புகுந்தங்கே நடுவிருப்பான்
பத்தரெல்லாம் வடம்பிடிப்பார் இருபாகையர்கள் பாடிநிற்பார்
சித்திபுத்தி நாயகராம் சீர் பொருந்தும் ஐங்கரனும்
முத்திருக்கும் கொம்பசைய முன்னாலே தேரூர்வார்
தான்தோன்றியாக வந்து கோவில் கொண்ட கோமானே
கொக்கட்டி நகருறையும் ஈசுபராலிங்கேசா - எங்கள்
தான்தோன்றும் பெருமானே பொன்னூஞ்சல் ஆடாமோ

03. கல்லினுட் தேரைகட்கும் கருப்பை உயிர்களுக்கும்
சொல்லாமறப்படியளப்பாய் சுருதிகளின் முடிவாவாய்
கல்லான நந்தி வந்து புல்லருந்திச் சாணமிட
பொல்லாத பறங்கியவன் புறங்காட்டி ஓடிடுவான்
நல்லோரை ஆதரிப்பாய் தீயோரை அடக்கி வைப்பாய்
எல்லோரும் வந்துனது தேர்வடத்தைத் தொட்டிழுப்பார்
தான்தோன்றியாக வந்து கோவில் கொண்ட கோமானே
கொக்கட்டி நகருறையும் ஈசுபராலிங்கேசா - எங்கள்
தான்தோன்றும் பெருமானே பொன்னூஞ்சல் ஆடாமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. ஆதியொடு அந்தமில்லா அருட்சுடரே ஒளிப்பிளம்பே
மாதிருக்கும் பாதியனே மாயவனின் மைத்துனனே
சோதி வடிவானவனே துன்பம் துயர் துடைப்பவனே
பாதி மதி புனைபவனே பாற்கடலின் நஞ்சை உண்டாய்
சாதி பல கூடுகின்ற தேசத்துக் கோவிலிது
நீதி பல நிலைநாட்டி முக்குகற்கு முதன்மை தந்தாய்
தான்தோன்றியாக வந்து கோவில் கொண்ட கோமானே
கொக்கட்டி நகருறையும் ஈசுபராலிங்கேசா - எங்கள்
தான் தோன்றும் பெருமானே பொன்னூஞ்சல் ஆடாமோ

05. வீரசைவர் பூசைசெய்வார் கோவைசியர் தொண்டு செய்வார்
பாராளும் வேந்தர்களாம் மாகோன் குளக்கோட்டன்
தாராள சிந்தையினால் தானமாய்த்தந்த நிலம்
ஏராளம் ஏராளம் எங்கும் வயல் நிலங்கள்
காராளர் அறுவடையில் கட்டொன்று நேர்த்தி வைப்பார்
ஆராத ஆவலுடன் புதிர்க் கோட்டை காவிடுவார்
தான்தோன்றியாக வந்து கோவில் கொண்ட கோமானே
கொக்கட்டி நகருறையும் ஈசுபராலிங்கேசா - எங்கள்
தான்தோன்றும் பெருமானே பொன்னூஞ்சல் ஆடாமோ

06. வண்ணக்கர் நிருவாகம் வகுத்தமைத்த முறைமையிலே
எண்ணற்ற ஆண்டுகளாய்தாய் வழியில் தொடர்கின்றதே
கண்ணுதலின் திருப்பணியில் கண்ணாக அவரிருப்பார்
மண்ணுக்குள் மகிமைபெற மகத்தான பணி புரிவார்
விண்ணுக்கு நாயகனே வேதவிழுப் பொருளே
கண்ணப்பன் உவந்தளித்த தேன் இறைச்சி உண்டவனே
தான் தோன்றியாக வந்து கோவில் கொண்ட கோமானே
கொக்கட்டி நகருறையும் ஈசுபராலிங்கேசா - எங்கள்
தான்தோன்றும் பெருமானே பொன்னூஞ்சல் ஆடாமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. மண்ணோரும் விண்ணோரும் வாருங்கள் என்றழைக்க
பண்ணோடு ஒலி எழுப்பும் மணித்தூண்கள் இருபுறமும்
அண்ணாந்து பார்க்கின்ற அதி உயர்ந்த கோபுரமும்
விண்ணோர்கள் இறங்கி வரநெடி துயர்ந்த கொடி மரமும்
எண்ணாது எண்ணி எண்ணி எழிலாக ஆக்கி வைத்த
கண்ணான பொம்மைகளும் கண்சிமிட்டி அழைக்குதையா
தான்தோன்றியாக வந்து கோவில் கொண்ட கோமானே
கொக்கட்டி நகருறையும் ஈசுபராலிங்கேசா - எங்கள்
தான் தோன்றும் பெருமானே பொன்னூஞ்சல் ஆடாமோ

08. ஏர்பூட்டும் ஆவணியின் முதற் பிறையில் கொடியேற்றம்
தேர்ஓட்டம் பூரணையின் பின்னே வரும் ஞாயிறு நாள்
பார் போற்றத் திங்களன்று தீர்த்தமொடு திருவேட்டை
பேர் சொல்லிச் சீர்வரிசை முட்டி அங்கே கூறிடுவார்
ஊர்திரண்ட சபைதனிலே ஒப்பற்றகுடுக்கைதனை
சீர்வரிசை தெரிந்தவர்கள் செப்பியங்கே பெற்றிடுவார்
தான்தோன்றியாக வந்து கோவில் கொண்ட கோமானே
கொக்கட்டி நகருறையும் ஈசுபராலிங்கேசா - எங்கள்
தான்தோன்றும் பெருமானே பொன்னூஞ்சல் ஆடாமோ

09. பிட்டுக்கு மண் சுமந்தீர்பிரம்பாலே அடியும் பட்டீர்
பட்டி பட்டியாய் நரியை பரியாக்கிக் கொண்டு வந்தீர்
கட்டு விறகெடுத்து கடைத்தெருவில் கூறி விற்றீர்
வெட்டிக் கழுத்தறுத் தோர் பிணிபோக்கிச் சுகமளித்தீர்
தொட்டுவடம் பிடிப்போர் சொர்க்கத்தில் இடம்பிடிப்பார்
கிட்டிஅருகிருந்து ஊஞ்சல் கேட்டோரும் நலம் பெறுவார்
தான்தோன்றியாக வந்து கோவில் கொண்ட கோமானே
கொக்கட்டி நகருறையும் ஈசுபராலிங்கேசா - எங்கள்
தான் தோன்றும் பெருமானே பொன்னூஞ்சல் ஆடாமோ

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



ஓம் சிவமயம்

## மட்/களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார்

# திருப் பொன்னூஞ்சல்

திருச்சிற்றம்பலம்

01. கரும்பிளநீர் சர்க்கரைதேன் பால் தயிர் நெய்பழவகைகள்
திருநீறு மஞ்சள் சந்தனமும் குங்குமத்தால்
திரு அபிடேகம் செய்து பட்டுடுத்தி பொட்டு வைத்து
பூமாலை பாமாலை பொங்கலுடன் பொருள் படைத்தோம்
திருவிளங்கு மால்மருகா சேவதனில் ஏறுகின்ற
அரன்மகனே ஆனைமுகா விகடநடம் ஆடி அருள்
களுவைநகர்க் கற்பகமே கணபதியே கஜமுகனே-எங்கள்
களுதாவளைப் பிள்ளையாரே பொன்னூஞ்சலாடாமோ.

02. அரிஓம் கணபதியாய் அனைவருக்கும் முதலில் நிற்பீர்
அங்குசம் பாசம் கொண்டு அனைவரையும் கவர்ந்திழுப்பீர்
அரிபிரமாதி தேவர் அன்புடனே வேண்டியதால்
கரிமுகனாம் சூரனையே மூசிகமாய் மாற்றி வைத்தீர்
எரிதழலில் புழுப்போல ஏழைபடும்துயர் போக்க
எலிமீது ஏறிவந்து எனக்கருள் தாருமையா
களுவைநகர்க் கற்பகமே கணபதியே கஜமுகனே-எங்கள்
களுதாவளைப் பிள்ளையாரே பொன்னூஞ்சலாடாமோ

03. ஆதியிலே லிங்கமப்பா ஆனைமுகன் ஆகியதாம்
வீதியிலும் வீற்றிருந்து வினைநீக்கி அருள் பொழிவீர்
வீதியெங்கும் மருதமரம் விளையாடும் நாகமெல்லாம்
சேதிசொல்லும் கல்வெட்டு செப்புகிறார் பெரியவர்கள்
ஆதிசிவன் பார்வதியும் அறுமுகனும் தேவியரும்
அருகில் அமர்ந்திருக்க ஊஞ்சலிலே வீற்றிருப்பீர்
களுவைநகர்க் கற்பகமே கணபதியே கஜமுகனே எங்கள்
களுதாவளைப்பிள்ளையாரே பொன்னூஞ்சலாடாமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. மந்தரமாமலையின் வடபுறத்திலே வாழ்ந்த
அந்தணனும் ஆயிழையும் அருந்தவங்கள் செய்ததனால்
இந்துதவழ் சோலை இராசமாநகரினிலே
அந்தணன் மகளாக அவதரித்தாள் இமயவல்லி
சந்திரனைச் சடையில் வைத்த சங்கரனும் கிழமாகி
மங்கை தவம் அறிந்து மணமுடித்தார் உமையவளை
களுவைநகர்க் கற்பகமே கணபதியே கஜமுகனே- எங்கள்
களுதாவளைப் பிள்ளையாரே பொன்னூஞ்சலாடாமோ

05. கார்த்திகையில் கார்த்திகை கழிந்தபின் ரோகிணியில்
ஆர்த்த கலிங்கத் தணி இழையால் காப்பணிந்து
கூர்த்த அறுகுடனே கூவிளமும் மலர்களுமாய்
சேர்த்துச் சரமாக்கி சேர்த்தோம் உன் மேனியிலே
நேர்த்திவைத்து நோன்பிருந்து நின்கதையைநாம் படித்தோம்
பார்த்திருக்க நியாயமில்லை பண்ணுமையா வழியெமக்கு
களுவைநகர்க் கற்பகமே கணபதியே கஜமுகனே- எங்கள்
களுதாவளைப் பிள்ளையாரே பொன்னூஞ்சலாடாமோ

06. விண்ணுலகின் தேவர்கட்கும் மேலான விநாயகனே
கண்ணுதலின் தேர் அச்சை முறித்து வைத்த கணநாதா
கண்ணிழந்து பாம்பான கண்ணனுக்கும் மீட்சி தந்தீர்
தம்பநூல் ஏணிவந்த ஏழு கன்னியர்க்கும் வரமளித்தீர்
ஒண்ணுதலார் பலபேர் உன்விரதம் பிடித்ததனால்
கண் அவரை மீண்டடைந்தார் கதைபடித்தோம் நாயகனே
களுவை நகர்க் கற்பகமே கணபதியே கஜமுகனே- எங்கள்
களுதாவளைப் பிள்ளையாரே பொன்னூஞ்சலாடாமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. கணபதியின் காப்பணிந்த காரிகையாள் இலக்கணையாள்
காப்பைக் கழற்றியல்லோ கொவ்வைக்கொடி மீதெறிந்தாள்
கணநாதன் கோபம் கொள்ள காவலன் துரத்திவிட
இலக்கணையாள் பட்டதுன்பம் ஏட்டில் எழுதவொண்ணா
குணநிதியாம் கணபதியின் கோபமென அறிந்து ஔவை
கதைபடிக்க இலக்கணையாள் கணவனையே மீண்டடைந்தாள்
களுவைநகர்க் கற்பகமே கணபதியே கஜமுகனே எங்கள்
களுதாவளைப் பிள்ளையாரே பொன்னூஞ்சலாடாமோ

08. வடமேற்கு மூலையிலே வெற்றிலைச் சடங்கு செய்த
பன்குளத்தின் மேற்கிலுள்ள பிள்ளையாரே உனை வணங்கி
வடசேரி தென்சேரி வாரம் பிரிந்து நின்று
போர்த்தேங்காய்நாம்உடைப்போம் கொம்புமுறித்தாடிடுவோம்
வடமோடி தென்மோடி வசந்தன் கரகாட்டம்
கோலாட்டம் கும்மி எல்லாம் அரங்கேற்றிக் கும்பிடுவோம்
களுவைநகர்க் கற்பகமே கணபதியே கஜமுகனே- எங்கள்
களுதாவளைப் பிள்ளையாரே பொன்னூஞ்சலாடாமோ

09. நீர்நிறைந்த ஆறுகுளம் நெல்வயல்கள் சூழ்ந்திருக்க
நிழல்தரு சோலையிலே ஏகாந்தமாய் இருந்தீர்
பேர்சொல்லி உனை அழைத்தால் பேழைவயிறைங்கரனே
ஆர்அழைத்தீர் ஏதுகுறை என்றறிந்து தீர்த்து வைப்பீர்
நேர்கடன்கள் நிறைவேற்ற இங்குவரும் அடியவரால்
நீர் செய்த அற்புதங்கள் நாம் அறிவோம் பிள்ளையாரே
களுவைநகர்க் கற்பகமே கணபதியே கஜமுகனே எங்கள்
களுதாவளைப் பிள்ளையாரே பொன்னூஞ்சலாடாமோ

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவாஞ்சலி

| நினைவுக்குரியோர் | நினைவு கூர்ந்து நிதியுதவியோர் |
| --- | --- |
| 1. சீ.அழகேந்திரன் | திரு.சீ.புவியேந்திரன் |
| 2. செ.இரத்தினம் | திரு.இ.அருளானந்தராசா |
| 3. சி.இராசையா | திரு.இ.நல்லையா |
| 4. ஆ.இராமச்சந்திரன் | திரு.ஆ.திசவீரசிங்கம் |
| 5. க.கணபதிப்பிள்ளை | செல்வி.ச.சுகன்னியா |
| 6. க.கந்தப்பெருமாள | திரு.க.சுந்தரலிங்கம் |
| 7. ஆ.குஞ்சித்தம்பி | திரு.கு.கந்தப்பன் |
| 8. ஐ.சண்முகநாதன் | செல்வன்.ச.புலோசனன் |
| 9. ஞா.சண்முகம் | திரு.ஞா.யோகநாதன் |
| 10. செ.சதாசிவம் | திரு.ச.சரவணபவன் |
| 11. ச.சந்திரகாந்தன் | திரு.ச.மகேந்திரன் |
| 12. சரவணையார் மரகதமுத்து தம்பதியினர் | திரு.மா.புவனேந்திரன் |
| 13. ப.சின்னத்தம்பி | திரு.சி.இராசரெத்தினம் |
| 14. சீ.இராசரெத்தினம் | செல்வி.ஜ.அபிலைஷினி |
| 15. வ.தி.சேதுபதிப்பிள்ளை மனோன்மணியம்மா தம்பதியினர் | திரு.சு.சுரேஸ் |
| 16. வ.தம்பிப்பிள்ளை | திரு.த.அழகரெத்தினம் |
| 17. பூ. தங்கராசா | திரு.த.சற்குணம் |
| 18. பொ.மார்க்கண்டு | திரு.மா.பாக்கியராசா |
| 19. பொன்னுத்துரை தங்கப்பொன் தம்பதியினர் | செல்வி.சு.அபிஷேகா |
| 20. மூ.வேலாச்சி அழகம்மா தம்பதியினர் | திரு.சி.குலசேகரம் |

குறிப்பு: நினைவாஞ்சலிப் பெயர்கள் அகர வரிசைக் கிரமப் படி அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# மட்-களுதாவளை சுயம்பு லிங்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த விழாக்களும் விரதங்களும்.

* புதுவருடப் பிறப்பு (சித்திரை)(சங்காபிஷேகம்1008)
* கும்பாபிஷேக நினைவு தினம்(வைகாசி அத்தம்) (சங்காபிஷேகம் 1008)
* வருடாந்த அலங்கார தீர்த்தோற்சவம் (ஆனி- உத்தரம்)
* விநாயக சதுர்த்தி விரதம் (ஆவணி சதுர்த்தி)
* சனீஸ்வரர் ஹோமம் (புரட்டாதி - சனி)
* கேதார கௌரி விரதம் (ஐப்பசி)
* கார்த்திகை சர்வாலய தீபம் (கார்த்திகை)
* விநாயக சட்டி விரதம் (காப்பறுப்பு தீர்த்தம்)
* திருவெம்பாவை திருவாதிரை தீர்த்தம் (மார்கழி திருவாதிரை)
* தைப்பொங்கல் (தை)
* மகா சிவராத்திரி விரதம் (மாசி)
* கல்லடிப் பிள்ளையார் ஆலய விசேட அபிடேகம். (பங்குனி உத்தரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org